# தூதன்

தூதன்-26 மே 2017 தூது-5

எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். கொலோசெயர் 3:24




தென் இந்திய திருச்சபை தமிழ் சபை - துபாய்

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 07 |
| உதவி ஆயரம்மா மடல் | 09 |
| செயலர் மடல் | 11 |
| He is my God... | 12 |
| ஆராதனை பாடல்கள் | 13 |
| சிறைக்கைதியால் ரட்சிக்கப்பட்ட காவல் அதிகாரி | 14 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 15 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| Young Reader's Column | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| ஓநாய் | 24 |
| தெரிந்து கொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| Children's Corner | 30 |
| Birthday Celebrants | 32 |
| Wedding Anniversary Celebrants | 36 |
| The Temple of Solomon (The First Temple) | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com,  E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

## ஒப்புரவாகுதல் என்னும் சாக்கிரமெந்து
## (The Sacrament of Reconciliation)

“இயேசு தம் சீடர்மேல் ஊதி, ‘தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிக்கிறீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படாதிருக்கும்’ என்றார்” (யோவான் 20:22,23).

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன்விசுவாசிகளே,

உழைப்பையும் ஓய்வையும் ஆசீர்வதித்த இறைவனின் திருப்பெயரில் உழைக்கும் அனைத்து மக்களுக்கும் நல்வாழ்த்துக்கள். உயிர்த்த பின்பும் கடுமையாய் உழைத்து தம் சீடரை உணரவைத்தவர், உரமூட்டியவர் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து. வியாபாரமயமாக்கப்பட்ட இவ்வுலகில் விவசாயத்தையும் காப்பாற்றப் போராடும் நிலை ஏற்பட்டுள்ளது. மனித உரிமை மற்றும் வாழ்வாதாரப் போராட்டங்களில் நம்மையும் இணைத்துக்கொள்ளும் அர்ப்பணிப்புள்ள கிறிஸ்துவத்தை வெளிப் படுத்துவோம். உழைப்புச் சுரண்டலையும், சோம்பலையும் கண்டிக்கிறார் ஆண்டவர். உழைப்பை வாழ்வின் ஆசீர்வாதமாக மாற்றுகின்றார். கைகளின் பிரயாசங்களின் பலனும், எருசலேமின் சமாதான வாழ்வும் கடவுளுக்குப் பயந்தவர்களின் நன்மைகளுள் சிலவாகும். சாக்கிரமெந்துகளின் அவசியத்தைக் குறித்துக் கவனித்து வரும் நாம் இம்மாதம் “ஒப்புரவாகுதல்” என்னும் சாக்கிரமெந்தைக் குறித்து சற்று அறிந்துகொள்ளவும், பின்பற்றவும் முயற்சிகள் செய்வோம்.

### சாக்கிரமெந்தின் வரலாறு (The history of the Sacrament):

உயிர்த்த பின்னும் ஆண்டவரது உழைப்பு நின்றபாடில்லை. தொய்ந்து போய், சந்தேகப்பட்டு, பயந்து நடுங்கி, பின்வாங்கி நின்ற சீடர்களை மீண்டும் நிலைநிறுத்தி, தூய ஆவியாரின் ஆற்றலை ஊதி, பாவ மன்னிப்பின் அதிகாரத்தை வழங்கியதன் (யோவான் 20:22,23) அடிப்படையில்தான் ஆதித்திருச்சபையில் இச்சாக்கிரமெந்து கடைபிடிக்கப் பட்டு வருகிறது. ஆனால் “ஒப்புரவு” என்பது ஏற்படாமல் பாவமன்னிப்பு வழங்கப்படுவதில்லை. காணிக்கைகளும் ஏற்கப்படுவதில்லை. இது ஆண்டவர் இயேசுவின் போதனைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. (மத்தேயு 5:23-26). உடன் சகோதரருடன் ஒப்புரவு ஆகாமல், அந்த உறவு விரிசலுக்கு நாமே காரணமாயிருந்தால், உடனே நல்மனம் பொருந்தவேண்டும்.

பின்னர் குற்றத்தை உணர்ந்து, சரிசெய்து, அறிக்கையிட்டு, பாவமன்னிப்பின் நிச்சயத்தோடு காணிக்கைகளைப் படைக்கவேண்டும். ஆம் ஒப்புரவுடன் கூடிய மனந்திரும்புதலின்றி பாவமன்னிப்பில்லை. (The sacrament of Reconciliation is based on the authority given by the resurrected Lord to the disciples in forgiving the sins (John 20:22,23) Further, as the Lord directed the disciples during the sermon on the Mount that without repentive reconciliation there is no penance (Mt. 5:23-26).

சீடர்களுக்கு ஆண்டவர் அருளும் இப்பாவமன்னிப்பின் அதிகாரம் அவர்கள் விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு அல்ல; மாறாக, இறை சித்தத்திற்கு ஏற்புடைய, தூய ஆவிக்கு விரோதமான குற்றங்கள் களையப்படுவதன் அடிப்படையில் வழங்கப்படவேண்டும் என்பதே. திருச்சபை வளர்ச்சியடைந்து விரிவடைந்தபோது அப்போஸ்தலர் அதிகாரத்தின்படி நியமிக்கப்பட்ட கண்காணிகளாகிய பேராயர்களாலும், மூப்பர்கள் எனப்பட்ட ஆயர்களாலும் பாவமன்னிப்பின் நிச்சயம் வழங்கப்பட்டது. கத்தோலிக்கத் திருச்சபை இவ்வதிகாரத்தை "பாவமன்னிப்புச்சீட்டு" என்ற அளவிற்கு எதேச்சாதிகார அடையாளம்போல கொண்டுசென்றதும், பாவமன்னிப்பில் மனிதசித்தம், இறைச்சித்தத்திற்கும் மேலாக நின்றதும் மார்ட்டின் லூத்தர் என்கிற கத்தோலிக்கப் போதகரால் கண்டிக்கப்பட்டது. அதன் விளைவாக உருவான சீர்திருத்தத் திருச்சபைகளிலே பாவமன்னிப்பு கடவுளால் நேரடியாக வழங்கப்படுகிற அதிகாரம் எனவும், மக்கள் நேரடியாக இறைவனிடம் பாவ அறிக்கை செய்து இறைவனுடனும், அயலாருடனும் ஒப்புரவாகலாம் எனவும் அடிப்படையான நம்பிக்கை எழுந்தது. அதன்படியே இன்றும் நாம் பொதுவான பாவ அறிக்கை செய்து பாவமன்னிப்பின் நிச்சயத்தோடு ஒப்புரவாக்கப்படுகிறோம். பாவமன்னிப்பை வழங்கும் பேராயர் அல்லது ஆயர் ஆண்டவருடைய பிரதிநிதியாக நின்று மாத்திரமே இதை வழங்கமுடியுமேயொழிய தனிப்பட்ட அதிகாரம் உடையவராக வழங்க இயலாது. (The sacrament of penance or reconciliation should be given on the basis of the will of God. Martin Luther, the father of the protestant church strongly condemned the blind autocratic authority of the church leadership or Papacy over and against the divine power in forgiving one's sins. So, people of God can confess in public worship and the absolution is given by the Bishop or the Presbyter is only through the authority of God and according to the grace of God).

## சாக்கிரமெந்தின் அவசியம் (The necessity of the Sacrament)

இப்படிப்பட்ட ஒரு சாக்கிரமெந்து அவசியமா? ஆண்டவர் இயேசு சிலுவையில் ஒரேதரம் நம் பாவங்களுக்காக மரித்தபின்பு மறுபடியும் பாவமன்னிப்புக்கோருதல் அவசியமா? இக்கேள்விகளுக்கான பதில் "நிச்சயம் அவசியம்" என்பதுதான். திருமுழுக்குப் பெற்ற ஒரு குழந்தை வளரும்போதும் அல்லது பருவம் கடந்த ஒருவர் ஆண்டவரை சொந்த இரட்சகராகவும், மீட்பராகவும் ஏற்றபின்பும் மீண்டும் பாவத்தில் வீழ்ந்துவிடும் பரிதாபம் ஏற்படுகிறது. அறிந்தும், அறியாமலும் குற்றங்கள், மீறுதல்கள் இழைக்கப்படுகின்றன. இதன்வழியே உறவுகள் இறைவனுடனும், சக மனிதருடனும் உடைபட்டுவிடுகிறது. இதைச்சீர் செய்யும்படியான விசுவாசப்பொறுப்பு நமக்கு உண்டு (மாற்கு 11:25-26). அதுமாத்திரமல்ல, இன்னும் கிருபாசனத்தண்டையில் அமர்ந்து நமக்காகப் பரிந்துபேசும் ஆண்டவராக கிறிஸ்துவை நாம் நம்புகிறோம். ஆகவே உத்தமபிரதான ஆசாரியரான அவர் வழியாகவே பாவமன்னிப்பின் உறுதியை, மீண்டும் விழுந்துவிடாமல் இறைநெறியில் நிலைத்திருக்கும் வாழ்வின் உறுதியாக ஏறெடுக்கிறோம். உடலளவிலும், உள்ளத்திலும் செய்துவிட்ட அறிவுக்கெட்டின, அறிவுக்கெட்டாத பாவங்களை உணர்ந்து அறிக்கை செய்வதும், அவற்றை மீண்டும் செய்யாமல் இருக்கின்ற மன்னிப்பின் நிச்சயத்தை இறைசமூகத்தில் பெற்று புதுவாழ்வை, மீட்பைத் தொடர்ந்து ருசித்துப் பார்க்கும் அனுபவமாக இச்சாக்கிரமெந்து விளங்குகிறது. அதேநேரம் ஏழெழுபதுதரம் மன்னிப்பு என்பதையும் நாம் அசட்டையாகவோ மீண்டும் பாவம் செய்து விடக்கூடிய வாய்ப்பாகவோ எடுத்துக்கொள்ளவே கூடாது. (The necessity of this sacrament of absolution for the penance in reconciliation is an assurance for continuing the new life given by the Lord Jesus who is pleading till today to the Father for grace as a good high priest).

கத்தோலிக்கத் திருச்சபையின் ஏழு சாக்கிரமெந்துகளில் ஒன்றாக இது கருதப்பட்டு கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், சீர்திருத்தச் சபைகளில் இச்சாக்கிரமெந்து ஆண்டவரின் இலவச பாவ மன்னிப்பை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி, நிச்சயப்படுத்தும் புனிதச்செயலாக விளங்குகிறது. ஆனால் அதை மெத்தனமாக உணராமல், தன்னிலை அறிந்து, தாழ்மையுடனும், உண்மையுடனும் பாவ அறிக்கையைச் செய்து, மீண்டும் ஒப்புரவாகி மறுபடியும் பாவம் செய்யமாட்டோம் என்ற உறுதியுடன் பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறவே நாம் அழைக்கப்படுகிறோம்.

"ஆகவே, ஒருவருக்கொருவர் பாவங்களை அறிக்கை செய்து கொள்ளுங்கள். ஒருவர் மற்றவருக்காக இறைவனிடம் வேண்டுங்கள், அப்பொழுது குணமடைவீர்கள்" (யாக்கோபு 5:16).

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி, சபை போதகர்.

# ஆயரம்மா மடல்

ஞானமுள்ள உழைப்பு (Wisdom in Labour) மத்தேயு 25:1-13

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

மரித்து, உயிர்த்து இன்றளவும் நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கும் தொடர் உழைப்பைச் செய்துவரும் நமதாண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் மே தின மற்றும் மே மாத நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த தேசத்தில் ஆண்டவர் நமக்குத் தந்த வேலை வாய்ப்புகளுக்காக, உழைக்கும் பலனுக்காக, ஊழியங்களுக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காத, உழைப்பு சுரண்டப்படுகின்ற நிலையிலிருக்கும் ஒவ்வொருவருக்காகவும் மன்றாடுவோம். அவர்களுக்குத் தோள் கொடுப்போம். "உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய், உனக்குப் பாக்கியமும், நன்மையும் உண்டாயிருக்கும்" என்ற ஆசீர்வாதம் உங்கள் அனைவரோடும் தங்கியிருப்பதாக. உழைப்பு அவசியம். அது நம்முடைய வாழ்வின் தேவைகளைச் சந்திக்க மட்டுமல்ல, நம் உடலையும், மனதையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள ஆண்டவர் தந்துள்ள நல்ல பயிற்சி. ஆகவே ஒருவரும் சோம்பலின் அப்பத்தை புசியாமல், உழைத்துத் தன் உணவை உண்ணவேண்டும் என்று திருமறை நமக்குக் கட்டளையிடுகிறது.

விழிப்போடும், ஞானத்தோடும் உழைப்பதை உறுதிசெய்யும் ஓர் உவமையைக்குறித்து இம்மடலில் காண்போம்.

மத்தேயு 25:1-13 பகுதியில் காணப்படும் "பத்துக் கன்னியர் உவமை" நமக்கு மிகவும் தெரிந்த உவமை. ஆனால் இதைக்கூர்ந்து வாசித்து தியானிக்கும்போது "ஐந்து ஞானமுள்ள கன்னியர் ஐந்து ஞானமற்ற கன்னியர் உவமை" என்றும் நம்மால் உணரமுடிகிறது. இந்தக் கதையில் மணவாளனுடைய வருகைக்காக பத்துபேரும் எண்ணெய், தீவட்டி, காத்திருத்தல் போன்ற சகல வேலைகளையும், ஆயத்தங்களையும் செய்கிறார்கள். ஆனால் இதில் ஐந்து பேர் ஏன் ஞானத்தில் குறைவுள்ளவர்களாக கருதப்படுகிறார்கள் என்பதுதான் கேள்வி? மணவாளன் வரத் தாமதித்துவிட்டது அவர்கள் குற்றமா? பொதுவாக இஸ்ரவேலில் திருமணங்கள் நடைபெறும்போது மணமகள் தன் வீட்டில் ஓர் அறையில் காத்திருக்கவும், மணமகன் தன்னுடைய நேரத்தின்படி அந்த அறைக்குள் பிரவேசித்து அவளைக் கரம் பிடிக்கவும், அப்படியாக தொடர்ந்து திருமணம் உறுதியும் செய்யப்படும். காத்திருக்கின்ற அந்நேரத்தில் திருமணத்திற்கான சகல ஆயத்தங்களும், பேச்சு வார்த்தைகளும் நடைபெறும். அவைகள் சுமூகமாக முடிந்தபின் கரம் பிடிக்கப்படும். அந்த ஆயத்த நேரத்தை முன் வைத்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இறையாட்சிக்கான ஆயத்தத்தோடு ஒப்பிட்டு உவமையாக வெளிப்படுத்துகிறார்.

**1. உழைப்பு இறையாட்சியின் அடையாளம் (Labour as the sign of the reign of God) :** மணவாளன் தன்னுடைய விருப்பப்படி நள்ளிரவிலோ அல்லது அதைக் கடந்தோ வந்து மணப்பெண்ணின் கைப்பிடிப்பது வழக்கம். அதற்கேற்ப மணவாட்டியும் தகுந்த ஆயத்தத்தோடு காத்திருப்பது அவசியம். அப்படியே இந்தப் பத்துக் கன்னியரும் மணவாளன் வருகைக்காக தீவட்டிகளைக் கொளுத்தி, எரியவிட்டாலும் தொடர்ந்து எரிவதற்கு எண்ணெயையும் கூடுதலாக ஐந்துபேர் மட்டும் வைத்திருந்தார்கள். ஆக பத்துபேரும் உழைத்து தகுந்த ஆயத்தத்தோடுதான் காத்திருந்ததாக நாம் பார்க்கிறோம். ஆனால் உவமையின் ஆரம்பத்திலேயே ஐந்து பேரை புத்தி இல்லாதவர்களாக ஆண்டவர் சுட்டிக் காட்டுகிறார். காரணம் அந்த தீவட்டிகள் தொடர்ந்து எரிய கூடுதல் எண்ணெய் அவர்களிடம் இல்லை. உழைப்பு இறையாட்சியின் அடையாளம். ஆனால் அதை தங்கள் சுயவிருப்பத்தின்படி, எண்ணத்தின்படி செய்கிறவர்களும் இறை சித்தத்தை உணராதவர்களும் புத்தி இல்லாத உழைப்பையே செய்கிறார்கள்.

**2. உழைப்பு இறைச்சித்தத்தின் அடையாளம் (Labour as the sign of God's will):** பல நேரங்களில் நமது கை சாமர்த்தியமும், திறமையும், பலனுமே வேலை செய்வதற்கு அடிப்படையாக உள்ளன என்று மேட்டிமையாக எண்ணி நாம் வாழ்கிறோம். ஆனால் பேசும்போது மட்டும் ஆண்டவர் கொடுத்த பணி இது, கடவுளின் கிருபை என்று சொல்லிக்கொள்கிறோம். புத்தியில்லாத கன்னியர் ஐந்துபேர் இப்படித்தான் அடையாளம் காணப்பட்டார்கள். தங்கள் தீவட்டிகள் எரிந்து முடிவதற்குள் வந்துவிடுவார் என்று சுய இச்சை கணக்கு போட்டார்கள். ஆகவே நடு ராத்திரியிலே மணவாளன் வரும்போது தீவட்டிகள் ஆயத்தமாயில்லை, எண்ணெய் இல்லை, வெளிச்சம் இல்லை. இருளில் அவர்கள் அடையாளம் காணப்படவில்லை. ஆகவே இறைச்சித்தத்தின்படி நமக்கு கொடுக்கப்பட்ட எந்த பணியையும் செய்து நிறைவேற்றுவோம்.

**3. உழைப்பு இறைவனின் பரிசு (Labour as the sign of God's Reward):** இறைச்சித்தத்தின்படி தகுந்த ஆயத்தத்தோடு எரிந்த தீவட்டிகளோடு காணப்பட்ட ஐந்து கன்னிகைகள் மணவாளனால் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்களுக்கு மணமகனுடன் என்றும் நிலைத்து, இணைந்து வாழும் நித்திய வாழ்வு பரிசாக அளிக்கப்பட்டது. இதற்குக் காரணம், அவர்களுடைய ஞானமுள்ள, ஆயத்தத்துடனான உழைப்பு. விழிப்பில்லாமல் சுய சித்தத்தில் உழைப்பவருக்கு கதவு திறக்கப்படாது என்று எச்சரிப்பு கொடுக்கப்படுகிறது. ஆகவே இவ்வுலக வாழ்வில் ஆண்டவர் நமக்குத் தந்த வேலைகள், வாய்ப்புகள் அனைத்தையும் இறைவனின் நாம மகிமைக்காகவும் இறை விருப்பத்தின்படியும் செய்து நிறைவேற்றுவோம். வேலை வாய்ப்பும் தகுந்த ஊதியமும், சுய மரியாதையும், ஓய்வுமின்றித் தவிக்கும் மக்களுக்காக வேண்டுவோம்! துணை நிற்போம்!! ஆமென்.

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர், ஆயரம்மா,

வாக்குத்தத்த செய்தி

கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பார். 2 சாமுவேல் 5:24b

விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராட அழைக்கும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

இஸ்ரவேல் ஜனங்களின் ஆசீர்வாதத்தை, அவர்கள் விதைப்பின் பலனை, கர்த்தர் அவர்களுக்கு அருளின பாலும் தேனும் ஓடும் ஆசீர்வாதமான நிலப்பகுதியைக் கொள்ளையடிக்கும்படி புறப்பட்டு வரும் கூட்டமே பெலிஸ்தரின் கூட்டம். இந்த பெலிஸ்தரின் கூட்டத்தை முறியடிக்கும் படிக்கே தேவன் தாவீதை அபிஷேகித்தார். இந்த அபிஷேகத்தினால் பெலிஸ்தரின் கூட்டத்தை முறியடித்தாலும் அந்த வெற்றி நிரந்தரமாக இல்லை. மறுபடி மறுபடி பெலிஸ்தர் படையெடுத்து வருகின்றனர். கர்த்தரின் விருப்பமோ நமக்கு நிரந்தர தீர்வை, நிரந்தர வெற்றியை அருள்வதே. ஏனெனில் நம் கர்த்தர் முற்றும் முடிய இரட்சிக்கிறவர் (எபி.7:25). இந்த தேவவிருப்பத்தை அறிந்து தாவீது, அதை நோக்கிப் பயணித்து, பெலிஸ்தரை நிரந்தரமாக முறியடிக்கிறார். தாவீதுக்குத் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை (2 சாமுவேல் 5:24b) சுதந்தரிக்க, அவர் என்ன அனுபவங்களையெல்லாம் உடையவராய் இருந்து அது நிரந்தர வெற்றிக்குப் பங்குள்ளவரானார் என்பதை இம்மாதத்தில் தியானிப்போம்.

### 1.அரணுக்குப்போன தாவீது (2 சாமு.5:17) David went to the Hold

பெலிஸ்தர் தாவீதைத் தேடும்போது, அவன் தன்னை ராஜாவாக்கின மூப்பர்களின் ஆலோசனையையோ, தன் குதிரைப்படை, ஆயுதங்களின் நிலையை அறியும்படி படைத்தளபதியையோ தேடிப் போகவில்லை. மாறாக, தனி ஒருவனாக, கர்த்தரின் சமூகத்தில் சென்று, "பெலிஸ்தருக்கு விரோதமாகப் போகலாமா?" என (2 சாமுவேல் 5:19) கர்த்தரின் ஆலோசனையையே அறியும்படிச் சென்றான். ஏனெனில் ஆபத்து நாளில் மனித ஆலோசனைகள், மனித பெலம், பணம் ஒன்றுக்கும் உதவாது என்பதைத் தாவீது அறிந்திருந்தான்.

பொல்லாத உலகத்தில், நம் வாழ்வின் மேன்மைகளை, சமாதானத்தை, பரிசுத்தத்தைக் கொள்ளையாடிப் போகும்படி, பிசாசு எப்போதுமே வகைதேடிக்கொண்டே இருக்கிறான். அந்த இக்கட்டான சூழ்நிலையில் அகப்படும்போது, ஜெபமே (அரணிப்பான இடம்) நம் வாழ்வின் கட்டுகளை, கஷ்டங்களை அவிழ்க்க உதவும். தாவீதும் கர்த்தரின் ஆலோசனையைத் தேடினபோது, "நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன்" என்ற பதிலைப் பெற்றுக்கொண்டு, வெற்றியையும் சுதந்தரித்தான் (19,20). வெற்றியின் அனுபவத்தை, அர்த்தங்கொள்ளும்படி, அந்த இடத்திற்கு, புதுப் பெயரை இட்டு, ஜெயத்தின் சந்தோஷத்தைச் சுதந்தரித்தான். தேவனும் தம்முடைய

ஒரே பேரான குமாரனை அனுப்பி, அவர் மூலம், சத்துருவின்மேல் வெற்றியைச் சுதந்தரிக்கும் அனுபவத்திற்குப் பங்காளிகளாகும்படி செய்திருக்கிறார். ஏனெனில் பிசாசு நம்மிலும் பெலவான். அவனை நாம், குமாரன் மூலமே ஜெயிக்கமுடியும். இந்த சத்தியத்தின் அர்த்தத்தை அறிந்து, ஜெயம் கொண்டும், நம்முடைய ஜெயம் நிரந்தரமாக இல்லை. எல்லா நாளும் வித்தியாசமான அனுபவங்களால் நெருக்கப்பட்டு சத்துருவோடு போராடிக்கொண்டே இருப்பதுபோல் உள்ளது.

ஜெபத்தின் மூலம் தாவீது பெலிஸ்தரை வென்றபோதும், இந்த வெற்றியின் சந்தோஷம் நிரந்தரமானதாக இல்லாமல், மறுபடியும் அதே பெலிஸ்தரே திரும்பவும் போரிட வருகின்றனர். அதன்பின் தாவீது என்ன செய்கிறார் என்பதைத் தொடர்ந்து காண்போம்.

### 2. விக்கிரகங்களைச் சுட்டெரித்த தாவீது (2 சாமு.5:21) David burns Idols

பெலிஸ்தர்கள், மந்திரம், மாந்திரிகம், ஏவல், பில்லி சூனியங்களை நம்பி பிழைக்கும் கூட்டம். இப்படிப்பட்ட பொல்லாத வழியைப் பின்பற்றி செய்யப்படும் விக்கிரகங்களே அவர்களின் தெய்வங்கள். இவைகளை, யுத்தத்திற்குக் கொண்டுவந்து, அந்த மந்திர வல்லமையாலேயே யுத்தத்தில் ஜெயம் பெறுவர். அப்படிப்பட்ட அவர்களின் நம்பிக்கையை அழிக்கும்படி, அவர்களுடைய விக்கிரகங்களைச் சுட்டெரிக்கிறான்.

நம் வாழ்விலும் அநேக வேளைகளில் நம் சமாதானம், பரிசுத்தம் கொள்ளையடிக்கப்படுவதற்குக் காரணம் மற்றவர்களோ, வாழ்வின் சூழ்நிலைகளோ அல்ல. நம் சுயமே காரணம் என்பதை கிறிஸ்துவைப் பின்தொடர நம்மை ஒப்புக்கொடுக்கும்போது அறிகிறோம். இதை அறிந்த திருச்சபையும், லெந்து காலத்தில் நம் சுயத்தைச் சுட்டெரிக்க வேண்டும் என்பதை நம் வாழ்வில் பூரணப்படுத்த, முயல விரும்பி, சுய வெறுப்பின் காணிக்கையின் மூலம், அதை நம்மில் நிலைநாட்ட வருடா வருடம் தவறுவதில்லை. ஏனெனில் கிறிஸ்தவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறையப்பட ஒப்புக்கொடுப்பது தேவவிருப்பம் (கலா.5:24). இதை அறிந்து சுயத்தைச் சுட்டெரிக்க ஒப்புக்கொடுத்து, அவரால் அவர் அன்பால் (கலா.2:20b) சுயத்தைச் சுட்டெரித்தாலும் நிரந்தரமான ஜெயம் அநேக வேளைகளில் இல்லை.

தாவீது விக்கிரகங்களைச் சுட்டெரித்தும், திரும்பி வரும் பெலிஸ்தரை (22) முற்றிலுமாக மேற்கொள்ள என்ன செய்கிறான் என்பதைத் தொடர்ந்து பார்ப்போம்.

### 3. மீண்டும் விசாரித்த தாவீது (2 சாமு.5:23) David enquired again

தாவீது, மறுபடி மறுபடி, கர்த்தரிடத்திலேயே விசாரிக்கச் செல்வதைக் காண்கிறோம். சோர்ந்துபோகாமல் ஜெபம் பண்ணும்போது, அவரை நம்பும்போது, அவர் நம்மை விசாரிக்கத் தவறுவதேயில்லை. தாவீதுக்குத் தேவன் இம்முறை ஒரு அடையாளத்தை (முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளில் செல்லும் இரச்சல் (வ24) கூறி, அவரே யுத்தத்திற்கு முன்செல்வதாக வாக்குப்பண்ணுகிறார் (வ24b). மோசே செங்கடலைக்

கடக்கும்போது கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார் என்றான். கர்த்தர் யுத்தம் செய்தபோது, அவர்கள் அன்று கண்ட எகிப்தியரை என்றும் காணவில்லை (யாத். 14:13,14). தாவீதும் அப்படியே கர்த்தரின் சேனை யுத்தம் செய்து, பெலிஸ்தரை நிரந்தரமாக, அவர்கள் எல்லையிலேயே காணாதபடி (வ25) முறியடித்ததைக் கண்டான். நிரந்தரமான ஜெயத்தைச் சுதந்தரித்தான்.

இயேசுகிறிஸ்துவும் தம்முடைய சீஷர்களுக்குப் பெந்தெகொஸ்தே அனுபவத்தை அடையாளமாக வாக்குப்பண்ணுகிறார்(அப்.1:8) கிறிஸ்து திரைச்சீலையாக இருந்த பாவச்சாயலை கிழித்ததன் மூலம், ஆவியானவர் நமக்குள் வந்து வாழும்படி நம்மையே அவரின் ஆலயமாக மாற்றினார். ஆவியானவரின் ஆளுகைக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது, ஒருவரும் கொள்ளையாட முடியாத சமாதானம் (யோ 14:27), எப்பாதுமே வெற்றி (2 கொரிந். 2:14) நம் வாழ்வை நிரப்பும். கர்த்தர் நமக்குமுன் இம்மாதத்தில் புறப்பட்டு, நம்மை நிரந்தரமான ஜெயத்தின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும்படி நடத்துவார். ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

தாய் தனக்குச் சோறு போடும்போது ரூபன் அவளது கரங்களையே பார்த்துக் கொண்டிருந்தான். எப்போதும் அப்படித்தான் செய்வான். குஷ்டரோகம் போன்ற அவளது நெளிந்த விரல்களும், வெள்ளையும் கருப்புமான தழும்புகளும் அவனை உமட்டச் செய்தன. கரண்டி இல்லாதபோது அவள் தன் கையினால் சாதத்தை எடுத்துப் போடும்போது அதைச் சாப்பிட முடியாமல் தவிப்பான். அவள் குளிப்பாட்டி விடுவதை வெறுத்தான். அவள் தன்னோடிருப்பதை தன் நண்பர்கள் பார்ப்பதை அவன் விரும்பவில்லை.

ரூபன் வளர வளர அருவருப்பு எண்ணமும் வளர்ந்தது. ஆனால் தன் உணர்வுகளைத் தாயிடம் சொல்ல அவனுக்குத் தைரியமில்லை. ஒருநாள் தாங்கமுடியாமல் தன் தாயிடம் கேட்டுவிடுவது எனத் தீர்மானித்தான். அவளைப் புண்படுத்தாமல் மென்மையாக இனித் தன் கைகளால் சாதம் போடவேண்டாமென சொல்லத் தீர்மானித்தான். ரூபனுக்கு வயது ஆறு. யாரும் அவனுக்கு அவளது தாயின் கரங்களைக் குறித்துச் சொன்னதில்லை.

இறுதியில் தைரியமாக, அம்மா, உங்கள் கைகளுக்கு என்ன ஆனது? ஏதாவது வியாதியா என்றான். அவனது தாய் புன்முறுவல் பூத்தார்கள். கேள், நாம் இந்த வீட்டிற்கு வருவதற்கு முன் ஒரு apartmentல் வாழ்ந்து கொண்டிருந்தோம். நீ அப்போது ஆறு மாதக் குழந்தை. உன்னைத் தூங்க வைத்துவிட்டு கீழே இருக்கும் ஒரு Supermarket-க்கு வீட்டு சாமான்கள் வாங்கச் சென்றேன்.

திடீரென்று கூக்குரல் கேட்டு ஓடி வந்தபோதுதான் நமது வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதைக் கண்டேன். நமது apartment-ல் நம் floor-ல் உள்ள அனைவரும் கீழே ஓடிவிட்டனர். நாம் இருந்தது 4th floor. மேலே 5th, 6th floor-ல் உள்ளவர்கள் சிலர் வந்து என்னைத் தடுத்து, உள்ளே பாய்ந்து சென்று உன்னை எடுத்துவர விரும்பினாலும், அவர்கள் என்னை அனுமதிக்கவில்லை. ஆனால் அவர்கள் பிடியிலிருந்து எப்படியோ என்னை விடுவித்துக்கொண்டு உள்ளே பாய்ந்தேன். நீ படுத்திருந்த மெத்தை தீப்பற்றத் துவங்கியிருந்தது. உஷ்ணத்தினால் நீ கண் விழித்து அழுதுகொண்டிருந்தாய். உன்னை அணுகுமுன்பாக தீப்பிழம்புகளை அணைக்க வேண்டியிருந்தது. என் கைகளினால் தீயை அணைத்து உன்னைத் தூக்கிக்கொண்டு வெளியே ஓடிவந்தேன்.

வெளியே வந்தபின்தான் என் கைகள் வெந்துபோயிருந்ததைக் கண்டேன். ஆனால் நீ பிழைத்துக்கொண்டாய் என்ற நிம்மதி எனக்கு. என்னை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சிகிச்சை செய்தனர். அறுவை சிகிச்சையும் பெற்றேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். என் கைகள் ஆறினதால் அவற்றைப் பயன்படுத்த முடிகிறது என்றார்கள்.

இதற்குள் ரூபனின் கண்களில் நீர் வழியத் துவங்கியிருந்தது. ஏங்கி ஏங்கி அழுதான். தாயின் கரங்களைத் தன் கைகளில் எடுத்து முத்தமிட்டு, “அம்மா, நான் பார்த்ததிலே மிகவும் அழகிய கரங்கள் இவைகள்தான்” எனச் சொல்லி தாயைக் கட்டிப்பிடித்துக்கொண்டான். அவர்களுடைய கரங்களைத் தன் நண்பர்களுக்குக் காட்டித் தழும்புகளின் கதையை விவரித்துக் கூறினான்.

இயேசுகிறிஸ்து நமக்குச் செய்ததும் இதுவேதான். நம்மை நரக அக்கினிக்குத் தப்புவிக்கும்படியாக அவர் தமது முகம், கைகள், கால்கள் மற்றும் முதுகைக் காயப்படவும், புண்ணாகவும் ஒப்புக்கொடுத்தார். நமது இதயபூர்வமான அன்புக்கு அவர் தகுதியானவர் அன்றோ?

**வேதவாசிப்புப் புகுதி :** ஏசாயா 53

**மனப்பாட வசனம் :** 1 யோவான் 4:9,10

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி∴பர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

# செயலர் மடல்

2017-ம் ஆண்டின் நான்கு மாதங்களைக் கடந்து ஐந்தாவது மாதத்தைக் காணச் செய்த என் கர்த்தருக்கு கோடானுகோடி நன்றிகளை ஏறெடுக்கிறேன்.

ஏப்ரல் மாதம் 7-ம் நாள் குருத்தோலை ஏந்தி ஆராதனை நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். இதற்காக ஆலயத்திற்கு குருத்தோலை கொண்டு வந்த ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகிறேன். ஏப்ரல் 10-ம் நாள் முதல் ஈஸ்டர் ஆராதனை வரை நமது முன்னாள் ஆயர் Rev.Jayakumar அவர்கள் குடும்பமாகக் கலந்து கொண்டு கர்த்தரின் செய்தியைப் பகிர்ந்து கொண்டது மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. அவரையும், அவருடன் வந்த ஆயரம்மா அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். அவர்கள் இங்கு தங்கியிருந்த நாட்களில் தங்கள் வீடுகளுக்கு அழைத்து உபசரித்த யாவருக்கும் நன்றி கூறுகிறேன்.

ஏப்ரல் 16-ம் நாள் Easter Sunday ஆசரிக்கப்பட்டது. இதில் அன்பின் விருந்து காலை ஆராதனை முடிந்தவுடன் பரிமாறப்பட்டது. கலந்துகொண்ட யாவருக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகிறேன்.

ஏப்ரல் 21-ம் நாள் நமது சபையின் சபை அங்கத்தினர்களின் பிள்ளைகள் 16 பேர் புதிதாக திடப்படுத்தல் பெற்று சபையில் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். அன்றைய தினம் திடப்படுத்தல் ஆராதனையை Chennai Diocese Bishop Rt.Rev.Dr.George Stephen அவர்கள் நடத்தி சிறப்பித்தார்கள். அவருடன் வந்த அவருடைய குடும்பத்தார் அனைவரையும் வாழ்த்தி வரவேற்கிறேன். இந்த ஆராதனையில் கலந்துகொண்ட ஏனைய ஆயர்மார்கள் Rev.Roy, CSI - SKD, Rev.Barnabas - CSI, Rev.Edwin John - CSI, Rev.Roland - CNI யாவருக்கும் நன்றி கூறுகிறேன்.

நமது பாடல் குழுவினர் சீருடை அணிந்து சபை ஆராதனையில் கலந்து சிறப்பித்தது மிகவும் அருமையாக இருந்தது. விசேஷமாக அதில் பங்கேற்பவர்களுக்கும், அவர்களை பயிற்றுவிக்கும் Mr.Ranjith Singh அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

சிங் ரத்னம், செயலர்.

# HE IS MY GOD, MY FATHER, MY GUIDE...

When you are feeling down, look up to the Lord above,
You'll see Him pouring you His unconditional love…

Don't worry when your tears wash your face,
Remember that He is carrying you through the race…

Never ever feel that you are alone,
Always know that you are one of the seed that He has sown…

Many are called, but chosen are few,
No matter what He will never leave you…

Hold on to Him, hold on tight,
Just live by His word and do what's right…

Your sins and iniquities may keep you apart,
But because of His eternal love, He keeps you in His heart…

Bow down and cry out to the Lord,
And be still and know that He is God…

Every day's worry keeps passing by,
But He is patient enough to listen to your cry…

He is my God, my Father, my Guide,
He holds me close and keeps me by His side…

Never will I feel afraid or worried,
For the days of my sorrow and tears are buried…

I will smile for He lives in me,
And I'll live for Him that others may see…

That this joy comes from deep within,
Because of Him I am free from sin…

No chords of fear or sin can entangle me,
For He took my place and set me free…

Who does this to a random me?
Who bothers to come down and see?

I know...

He is my God, my Father, my Guide,
He holds me close and keeps me by His side…

Rushmi Kissinger

# ஆராதனை பாடல்கள் - மே 2017

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 103 எவ்வண்ணமாக கர்த்தரே
ஆராதனை இறுதி கவி : கீர்த்தனை 30 அனுக்ரக வார்த்தையோடே

### 05-05-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 155 | சர்வத்தையும் அன்பாய் |
| பாமாலை | 199 | இயேசுவை நம்பி பற்றிக்கொண்டேன் |
| கீர்த்தனை | 4 | ஆத்துமமே என் முழு உள்ளமே |
| கீர்த்தனை | 144 | தேவனே நான் உமதண்டையில் |
| கீர்த்தனை | 87 | சத்திய வேதத்தைத் தினம் தியானி |

### 12-05-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 43 | விண்ணோர்கள் போற்றும் |
| பாமாலை | 41 | நேர்த்தியானதனைத்தும் |
| கீர்த்தனை | 13 | சீர்மிகு வான்புவி தேவா |
| கீர்த்தனை | 36 | கண்களை ஏறெடுப்பேன் |
| கீர்த்தனை | 8 | ஏசுவையே துதி செய் |

### 19-05-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 5 | உம்மைத் துதிக்கிறோம் |
| பாமாலை | 190 | இயேசு எங்கள் மேய்ப்பர் |
| கீர்த்தனை | 156 | என்ன என் ஆனந்தம் |
| கீர்த்தனை | 175 | தந்தானைத் துதிப்போமே |
| கீர்த்தனை | 56 | இயேசுவின் நாமமே |

### 26-05-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 194 | அருள் ஏராளமாய் |
| பாமாலை | 119 | ரட்சா பெருமானே பாரும் |
| கீர்த்தனை | 164 | தந்தேன் என்னை இயேசுவே |
| கீர்த்தனை | 200 | மறவாதே மனமே |
| கீர்த்தனை | 182 | வீராதி வீரர் யேசு சேனை |

# சிறைக்கைதியால் ரட்சிக்கப்பட்ட காவல் அதிகாரி

கிரேக்கச் சிறைக்குள் ஓர்இரவு
உறக்கம் வராத ஈர்உறவு
அறைக்குள் பவுல்–சீலா தாள்கதவு
உருக்கச் ஜெப–கீதம் நேர்பரவி

சடுதியில் அடிப்படை ஆடிற்று
அடியோடு பூமியே கிடுகிடுத்து
உடனே கதவுகள் உடையுது
கட்டுவிட்டு கைகால் நெகிழுது

கேட்டுக் கிட்டிருந்த கைதிகளுக்கும்
கிட்டும் விடுதலை இலவசம்
நடுராவும் தொடுதூரம் தெய்வம்
விடுப்பும் வியர்ப்பும் பரவசம்

சிறைக்காவலன் விழித்தான் துடித்தான்
சிறைக்கதவுகள் கிடப்பதைக் கண்டான்
சிறைப்பட்டோர் ஓடிவிட்டார் நினைத்தான்
உறைவாளைத் தனைக்கொல்ல உருவினான்

உரத்த குரல்சொல் பவுல்சொல்
" நிறுத்து கெடுதலை தற்கொலை
இருக்கிறோம் ஒருவரும் ஓடவில்லை "
இருட்டில் மிரட்சியில் அடைபட்டோர்

உள்ளே ஓடினான் தீபத்துடன்
முன்னே பவுல்–சீலா வணங்கினான்
வெளியே அழைத்து வந்தான்
வழியைக் கேட்டான் ரட்சிக்க–தான்

" விசுவாசி இயேசுகிறிஸ்துவே கர்த்தர்
வசமாகும் உனக்கும் வீட்டாருக்கும்
நிசமாய் ரட்சிப்பு நிலைப்படும்
பிசகாத வசனமே பலப்படுத்தும் "

கழுவினார் கட்டினார் காயங்கள்
முழுக்குடும்பம் ஞானஸ்நானம் பெற்றார்கள்
பழுத்த விசுவாசம் நுழைந்தார்கள்
பவுல்–சீலாவை ஊட்டி மகிழ்ந்தார்கள் !

ஆதாரம் :
அப்போஸ்தலர் 16:22–34
கவிதை எண் : 198
கவிதை ஆக்கம் : மணிமுத்து

# நீங்கள் கிறிஸ்தவரா...

தீங்கு புழுதியிலிருந்து உண்டாகிறதுமில்லை,
வருத்தம் மண்ணிலிருந்து முளைக்கிறதுமில்லை.
அக்கினிப் பொறிகள் மேலே பறக்கிறதுபோல,
மனுஷன் வருத்தம் அநுபவிக்கப் பிறந்திருக்கிறான். யோபு 5:6,7.

கர்த்தர்...
ஒரு உயிருக்கு
உடம்பு.. எனும்
உடையை
மாட்டிவிடுகிறார்.
அதனதன் காலம்
முடியும் காலம்
உடம்பை....
உயிரிலிருந்து
கழற்றிவிடுகிறார்.
காரணம்....
நிரந்தரமில்லாத
இந்த உலகிலிருந்து
நிரந்தரமானதும்,
கண்ணீரும்
கவலையும்
இல்லாததும்,
என்றுமே
நிலையானதும்,
ஒளிர்வதும்
மிளிர்வதுமான
நித்திய ஜீவனை
வாழ்விக்க மகிழ்விக்க
மனிதரின் ஆத்மா
பரம் அடைய
ஆண்டவர் இயேசு
பரிந்துரைக்கிறார்.
இதை உணர்பவரே
ஞானம் பெற்றவர்
வேதம் கற்றவர்
மனித மனம்
நில் என்றால்
நிற்குமோ
வில் போல் அம்பு
தொடுக்குமோ
சொல் என்றால்
சொல்லுமோ
மாயையால் வரும்
வல்வினையும்
போகுமோ
பணத்தின்
மீது ஆசை...
ஆசை பேராசையாக
உறுமாறும் நேரம்
பாவங்கள் பலவாக
உருவாகும் வேளை
அமைதி எங்கே...?
நிம்மதி எங்கே...?
மண்ணுலகில்
மாயை மனதைக்
கவரும் வண்ணம்
கண்ணுக்குக்
காட்சி தரும்
மனம்...
மாயைக்குள்
நுழைந்து விட்டால்
கரையேறுவது
கஷ்டம்தானே...?
அப்போது
கர்த்தரைக்
காண்பதும்
நஷ்டம்தானே..?
இப்போது...
தீங்குவரும்
மனம் வருந்தும்
துரந்தங்கள்
துரத்தும்
துன்பங்கள்
பின்தொடரும்
புழுதியோ மண்ணோ
மனிதருக்கு
பகையில்லை
மண்ணில்
இருந்துதான்
மனிதனுக்கு
வகைவகையாய்
தாராளமாய்
தரப்படுகிறது.
ஏராளம் பெறப்படுகிறது.
இங்கே....
நமக்கு நாமே
போட்டுக்கொள்ளும்
முடிச்சுதான்
நம்மை முள்புதருக்குள்
தள்ளுகிறது.
இதிலிருந்து
மீண்டுவர
மீட்பர் இயேசுவின்
பொன்னடி
போற்றுவோம்.
அறிவிலி நான்
மடமையில்
மூழ்கினேன்
மன்னித்தருளும்
இயேசுவே..யென
துதிப்போம்
நம் பாவம் ஏற்று
இரட்சித்த
இறைமைந்தன்
இயேசுவின் கிருபை
இம்மை வாழ்வில்
இனிமை தரும்
மறுமை வாழ்வில்
பரம் தரும்.

...தொடரும்

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

## யாக்கோபு

யாக்கோபு ஆரானுக்கு பிரயாணமாய் போய் வழியில் “மேய்ப்பர்கள் கிணறு” எனப்பட்ட கிணற்றண்டையில் வந்து சேர்ந்தார். அங்கே சில மனுஷரைக் கண்டு அவர்கள் தங்கள் மந்தையை மேய்க்க ஆரானுக்கு செல்லுகிறவர்கள் என அறிந்து, அவர்கள் எவ்விடத்தார் என விசாரித்தார். அவர்கள் யாக்கோபைப் பார்த்து, நாங்கள் ஆரான் ஊரார் என்றார்கள். இப்படியாக விசாரித்து ராகேலைச் சந்தித்த யாக்கோபு லாபானையும் சந்திக்க நேர்ந்தது. இவர்களைச் சந்தித்த யாக்கோபால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு வழங்க யாக்கோபிடம் எதுவுமில்லை. யாக்கோபு லாபானிடம் தன் சகோதரன் ஏசா தனக்குச் செய்ததையும், அவரது மகனாகிய எலிப்பாஸ் தனக்கு செய்த எல்லாவற்றையும் அறிவித்தார்.

ஒரு மாதமாக யாக்கோபு லாபானுடைய வீட்டிலேயே தங்கியிருந்தார். லாபான் யாக்கோபிடம், நீ எனக்கு சும்மா வேலை செய்யலாமா? சம்பளம் எவ்வளவு கேட்கிறாய் என்றார். லாபானுக்கு இரண்டு குமாரத்திகளைத் தவிர குமாரர்கள் இல்லாதிருந்தது. யாக்கோபு லாபானிடம் உம்முடைய இளைய குமாரத்தியாகிய ராகேலுக்காக உம்மிடம் ஏழு வருடம் வேலை செய்கிறேன் என்றார்.

முதல் வருடம் உருண்டோடியது. இரண்டாம் வருடம் யாக்கோபின் எழுபத்தொன்பதாவது வயதில் சேமின் குமாரனாகிய ஏபேர் தனது நானூற்று அறுபத்தி நான்கு வயதில் மரணமடைந்தார். இதைக் கேள்விப்பட்ட யாக்கோபு அநேக நாட்களாக துக்கங்கொண்டாடினார்.

மூன்றாம் வருடம் ஏசாவின் மனைவியாகிய இஸ்மவேலின் குமாரத்தியாகிய பஸ்மாத் ஏசாவிற்கு ரூயல் என்னும் மகனைப் பெற்றாள்.

நான்காம் வருடத்தில் தேவனாகிய கர்த்தர் யாக்கோபினிமித்தம் லாபானை நினைந்தருளினார். ஆகவே அவனுக்கு பேயர், அலிப் மற்றும் கோராஸ் என்னும் குமாரர்கள் பிறந்தனர். கர்த்தர் யாக்கோபினிமித்தம் லாபானை செல்வத்தினாலும், கனத்தினாலும், குமாரரினாலும், குமாரத்திகளினாலும், மிகவும் ஆசீர்வதித்தார். யாக்கோபு எல்லா வேலைகளிலும் வீட்டிலும் வெளியிலும் லாபானைச் சேவித்தார். அதினிமித்தம் லாபான் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை வீட்டிலும் வெளியிலும் அனுபவித்தார்.

ஐந்தாம் வருடம் யூதித் என்னும் ஏசாவின் மனைவி மரணமடைந்தார். அவள் ஏசாவுக்கு மர்சித் மற்றும் பூயித் என்னும் குமாரத்திகளைப் பெற்றிருந்தாள். இதன் பின்பு ஏசா தனது வழக்கப்படி வேட்டையாட சேயீருக்கு சென்று அங்கேயே தங்கிவிட்டார்.

ஆறாம் வருடம் ஏசா செபியோனின் குமாரத்தியாகிய அக்லிபாமாவை தனக்கு மனைவியாக்கிக்கொண்டு கானானுக்கு வந்தார். அவள் அவருக்கு ஏயூஷ், யாலன், கோரா என்னும் குமாரரைப் பெற்றாள். ஏசாவின் மந்தை திரளாயிருந்தபடியால் ஏசாவின் மேய்ப்பருக்கும் கானானிய மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்து. கானானில் இருந்த தன் தகப்பனாரின் வீடு இவற்றை தாங்கக்கூடாதிருந்தது. எனவே ஏசா எழுந்து, தன்னுடைய மனைவிகள், குமாரர், குமாரத்திகள் மற்றும் தனக்குண்டான எல்லாவற்றையும் கூட்டிக்கொண்டு சேயீருக்குச் சென்று அங்கே தங்கிவிட்டார். ஆனால் தன்னுடைய தகப்பனாரையும் தாயாரையும் கண்டு வர அடிக்கடி கானானுக்குச் சென்று வந்தார்.

ஏழாம் வருட முடிவில் யாக்கோபு லாபானை நோக்கி, என்னுடைய வேலை முடிந்துவிட்டது. இப்பொழுது உம்முடைய மகளை எனக்கு மனைவியாகத் தாரும் என்றார். லாபானும் ஒத்துக்கொண்டு இருவரும் பெரிய விருந்திற்கு ஏற்பாடு செய்தனர். அன்றைய தினம் சாயங்கால வேளையில் லாபான் வீட்டிற்கு வந்தார். யாக்கோபும் தன் மனிதரோடு விருந்தில் கலந்துகொள்ள லாபானின் வீட்டிற்குள் பிரவேசித்தார். லாபான் தன்னுடைய வீட்டில் எரிகின்ற அனைத்து விளக்குகளையும் அணைத்துவிட்டார். யாக்கோபு லாபானை நோக்கி ஏன் இவ்வாறு எங்களுக்குச் செய்தீர் எனக் கேட்க, அதற்கு லாபான் இது இந்நாட்டின் வழக்கம் என்றார். இதன் பின்பு லாபான் லேயாளை யாக்கோபிற்கு மனைவியாகக் கொடுத்தார். இருட்டாக இருந்ததினால் யாக்கோபு இதை அறியவில்லை. விருந்தில் கலந்துகொண்ட அனைவரும் லாபான் யாக்கோபிற்கு செய்ததை அறிந்திருந்தனர். ஆனால் யாரும் அதைக்குறித்து யாக்கோபிடம் அறிவிக்கவில்லை. அவருடைய அண்டை வீட்டார் அனைவரும் கூடி வந்து புசித்துக் குடித்து மகிழ்ந்து பின்னர் லேயாளின் முன்பாக நடனமாடி, யாக்கோபிடம் வந்து "ஹேலேயாள் ஹேலேயாள்" என்று கூறினர். யாக்கோபு அவ்வார்த்தைகளை கேட்டார் ஆனால் அவற்றின் அர்த்தத்தை புரிந்துகொள்ளவில்லை. மாறாக அப்படி உச்சரிப்பது அந்நாட்டின் வழக்கமாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டார். இவர்கள் இப்படி உச்சரித்த போதும் அன்றிரவு முழுவதும் லாபானுடைய வீட்டின் விளக்குகள் அணைந்த வண்ணம் இருந்தது.

மறுநாள் காலமே வெளிச்சம் தோன்றிய பின்னர் யாக்கோபு தன் மனைவியிடமாகத் திரும்ப, தன்னுடன் இருப்பது லேயாள் எனக் கண்டு அப்பொழுதுதான் ஹேலேயாள் என்பதின் அர்த்தத்தை புரிந்துகொண்டார். இப்படித்தான் லேயாள் யாக்கோபின் மனைவியானார்.

தொடரும்....

நன்றி: யாசேரின் புத்தகம்

தொகுப்பு & தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## My visit to the Mortuary

"Have you ever been to the mortuary before???? asked my boss.
"Mortuary??" "Oh, no", I replied
"Josephine, if you are bold enough,
Then take this assignment and go to the mortuary", said my boss
I nodded with much hesitation
I was curious ....as I have never been to the mortuary
On the other hand I was scared to see a dead body
The next morning, I mustered up courage, saying
"Be bold! Be strong in heart.... Don't get scared" I told myself over and over again......

As I entered the Government hospital in Chennai, I saw hundreds of people standing in groups crying and waiting anxiously to receive the dead body of their loved ones.... I was moved by their wailing sound. My legs started trembling in fear. We showed our identity cards.The security gave us access through the restricted door ....

As we entered, I stepped in with my right foot,
There was hardly any space to rest my left foot
As there was a corpse lying near the door....
There were hundreds of bodies on the floor
Thrown around one above the other....
Many of them without limbs
Some with injured head and damaged face
Most of them lying half dressed or with nothing at all
There were house flies feasting upon these dead remains
There lay together the rich and the poor ones,
The crippled and the whole, the educated and the uneducated,
The noble and the dignified,
The decent and the street urchins
All under one roof in equal status.......

"Lord, isn't death a cruel thing for mankind??? " I asked
I came home frustrated, "Life isn't worth living!" I said to myself
Life is worthless, meaningless... I grumbled
Health, wealth, beauty, popularity, education, money....
Every effort under the sun is worthless" I murmered again and again battling through the sleepless nights... unable to forget or accept what I had seen at the mortuary.

Early morning, I heard the gentle voice of God comforting me....
Life is not worthless to be wasted... LIFE IS PRECIOUS
It can be made worthy or worthless - The choice is yours!
THERE'S ONLY ONE CHANCE TO LIVE
A life invested for earthly success is surely an unworthy one
BUT a life invested for fulfilling God's purpose will
Receive eternal glory that cannot be compared to anything earthly
So do not grieve like the rest of mankind who have no hope
For Blessed are those who die in the Lord!!
So fix your eyes, not on what is seen
But on what is unseen, since what is seen is temporary
BUT WHAT IS UNSEEN IS ETERNAL!!!

Life will take a new meaning if it is lived for God's glory
You will continue to live even after death
If you live like a fruitful tree bearing good fruits...
If you live as the salt of the earth by adding flavour into other's lives
If you lead the lost ones to the right path as the light of the world
Above all, life will be worth all the pain and suffering
When you enter the kingdom of God to be crowned as the child of God....

From that day on, I chose to live for God -
If I live, I will live for the Lord.
If I die, I will die for the Lord...
Whether I live or die, I now have hope 'cos
My life is worth living as I BELONG TO THE LORD!!!

# திருச்சபை ஜெபநாள் 07-05-2017 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும்;
என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக." சங்கீதம் 102:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- பரிசுத்த வார விசேஷித்த ஆராதனைகள், உயிர்ப்பின் ஆராதனை, திடப்படுத்துதல் ஆராதனை யாவும் ஆசீர்வாதமாக நடைபெற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக

- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
